இனவெறி மற்றும்
வெறுப்புக்கு
எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council
Toronto Chapter

Ontario

# ‘இனவாதம் என்றால் என்ன?’

## 1. இனவாதம்

இனமே அடிப்படையில் "மனிதரின் குணங்களையும் திறன்களையும் தீர்மானிக்கின்றது எனவும், அதனால் குறித்த ஓர் இனத்தின் மேன்மையை அவ்வனவேறுபாடுகள் வழிவழியாக உருவாக்குகிறது எனவும் நிலவும் நம்பிக்கை.






1. **Merriam-Webster. (n.d.).** ***Racism***
2. **Dictionary.com. (n.d.).** ***Racism.***

# 2. இனம் என்பது சமூக ரீதியாக கட்டமைக்கப்பட்டது

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

"உள்ளார்ந்த மற்றும் மாற்ற முடியாத" (இயல்பான மற்றும் மாறாத) உடல் பண்புகள், உயிரியல் வேறுபாடுகளின் அடிப்படையில் மக்களை வகைப்படுத்த இது உருவாக்கப்பட்டது, இது உண்மைக்கு மாறானது.





3. York University, 2006
4. Ibid
5. Smedley & Smedley, 2005 as cited in National Collaborating Centre for Aboriginal Health (NCCIH), 2013

இன வேறுபாடுகள் கலாசார மற்றும் சமூக புரிதல்களை பிரதிபலிப்பதுடன், "புவியியல், வரலாற்று, அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார காரணிகள், உடல் பண்புகள் ஆகியவற்றின் அடிப்படையில்" அமைகின்றன.



இனப் பிரிவுகளின் பயன்பாடானது, வளங்கள் மற்றும் அதிகாரப் பகிர்வில் பெரிய ஏற்றத்தாழ்வுகளைத் தொடர்ந்து நிறுவியும் பேணியும் வருகிறது.

# 3.இனமயமாக்கம்:

இனவெறி மற்றும்
வெறுப்புக்கு
எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

இனத்தின் அடிப்படையில் சில மக்கள் குழுக்களை வரையறுக்கும் ஒரு சமூக செயன்முறை

இயற்கையானதும் மாற்ற முடியாததுமான அடையாளத்தைக் கொண்டிருக்கக்கூடிய சிறுபான்மைக் குழுவொன்றை இனமயமாக்கல் செயல்முறையானது இனத்தின் அடிப்படையில் அடையாளப்படுத்துகிறது.





6. Omni, 2001, p. 254
as cited in NCCIH, 2013

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

**4. பொருளாதாரம், அரசியல், பண்பாடு ஆகிய ஏற்றதாழ்வு வடிவங்களால் கட்டமைக்கப்பட்ட சமூக ஒழுங்கொன்றில் மட்டுமே, சமூக வகைப்படுத்தல் எனும் அளவில் 'இனம்' எனும் எண்ணக்கருவும் அதன் தொடர்ச்சியான இருப்பும் அர்த்தமொன்றைக் கொண்டிருக்கின்றன. இவ் ஏற்றத்தாழ்வு வடிவங்கள் குறிப்பிடத்தக்க அளவில் இனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.**

பெரும்பாலான விண்ணப்பங்களிலும் கணக்கெடுப்புகளில் இனப் பிரிவுகள் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன. மக்கள்தொகைக் கணக்கெடுப்பு உட்பட இனத் தரவுகள் அரசாங்கத்தாலும் சேகரிக்கப்படுகின்றன. கனடாவில் இனத் தரவுகளைச் சேகரிப்பதன் நோக்கம் சம வாய்ப்புகளை ஊக்குவிப்பதாகும்.[2] அது இனப் பிரிவுகள் சமத்துவமின்மையின் வடிவங்களால் கட்டமைக்கப்பட்டுள்ளதை நிரூபிக்கிறது.



# 5. புலப்படும் சிறுபான்மையினர் (Canadian Visible minorities): தெற்காசிய, சீன, கறுப்பின, பிலிப்பினோ, அரபு, லத்தீன் அமெரிக்க, தென்கிழக்கு ஆசிய, மேற்கு ஆசிய, கொரிய மற்றும் ஜப்பானிய மக்கள்

கனடாவில், புலப்படும் சிறுபான்மை என்ற சொல் அரசாங்கத்தால் பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு இன-குறியீட்டு வகையாகும்.

அனைவருக்கும் சம வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்காக கனடாவின் புலப்படும் சிறுபான்மை மக்கள் பற்றிய தரவுகளை அரசாங்கம் தொடர்ந்து சேகரித்து வருகிறது. எவ்வாறாயினும், இந்த முறைமையில் பலதரப்பட்ட இன வரலாறுகளைக் கொண்ட பல்வேறு இனப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் அனைத்து சிறுபான்மையினருக்கும் ஒரே மாதிரியான தீர்வுகள் வழங்கப்படுவது வேறுபட்ட பிரதிகூலத்தைக் கொடுக்கிறது.



இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

**6. கனடாவின் கடந்த கால மற்றும் நிகழ்கால ஆதிக்க வரலாறு, கட்டுப்பாடு அல்லது செல்வாக்கு மூலம், வெவ்வேறு வழிகளில் வெவ்வேறு இனவாத சமூகங்களை பாதித்துள்ளது. கனேடிய ஆதிக்கம் வரலாற்று ரீதியாக வெள்ளையர்கள் மற்ற இன குழுக்களை விட உயர்ந்தவர்கள் என்ற கருத்தை ஊக்குவிக்க பயன்படுத்தப்பட்டது.**



உதாரணத்திற்கு, வதிவிட பாடசாலைகள் மூலம் பழங்குடியின மக்கள் வலுக்கட்டாயமாக ஒருங்கிணைக்கப்பட்டதைக் (forced assimilation)[5] கூறலாம். 6



# சுகாதார அணுகல், கல்வி, வேலைவாய்ப்பு, வீட்டுவசதி, carceral அமைப்பு போன்றவற்றில் அதிக ஏற்றத்தாழ்வுகள் தெளிவாகத் தெரிகின்றன.

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

COVID பெருந்தொற்றின் போது அவ்வாறான ஏற்றத்தாழ்வுகள் இடம்பெற்றதைக் காண முடிந்தது. முன்கள பணியாளர்கள் பலர் இன ரீதியான பாகுபாட்டிற்கு உள்ளானதுடன், சிலர் குறைந்த வருமானத்தைப் பெற்றனர்.



**சுகாதாரப் பராமரிப்பின் போது கறுப்பின, பழங்குடியினர் மற்றும் பிற இன நோயாளிகளுக்கு பெரும்பாலும் வெள்ளை இன நோயாளிகளுக்கு அளிக்கப்படும் அதே அளவு கவனிப்பு அல்லது மரியாதை வழங்கப்படுவதில்லை, இது மோசமான சுகாதார விளைவுகளுக்கு வழிவகுக்கிறது.**





# கனடாவும் பன்முக கலாசாரமும்

இனவெறி மற்றும் வெறுப்புக்கு எதிரான ஆசிரியர்கள்

TAMIL Canadian Centre for CIVIC ACTION

Chinese Canadian National Council Toronto Chapter

Ontario

ஆம் நாம் பலதரப்பட்ட சமூகம். இருப்பினும், நமது சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் பன்முகத்தன்மைக்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் மதிப்பளிக்கப்படுவதில்லை.



## நாம் அனைவரும் ஒரே இனம் (மனித இனம்) என்று வாதிடும் நிறக்குருட்டுச் சொல்லாட்சி (Colour-blind rhetoric), முறைமைசார் இனவாதத்தினை தொடர்ந்து உயர்த்தி, கண்ணுக்குத் தெரியாததாக்குகிறது

நாம் அனைவரும் ஒரே மாதிரியாக இருப்பதாகக் காட்டிக் கொள்ள முடியாது, ஏனென்றால் இது தொடர்ந்து சமத்துவமின்மையை நிலைநிறுத்துகிறது. அதற்குப் பதிலாக, இனம், பாலியலியல்பு, பாலின அடையாளம், திறன் போன்றவற்றில் உள்ள வேறுபாடுகள் உட்பட எல்லோருடைய வேறுபாடுகளையும்
விளிப்பதற்கான சமத்துவமான வழிவகைகள் நமக்குத் தேவை.